செ.வெ.எண்: 89 நாள்:29.06.2021

# தென்னிந்திய பஞ்சாலை கழகம் மற்றும் துணிநூல் தொழில் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வு கூட்டம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(29.06.2021) தென்னிந்திய பஞ்சாலை கழகம் மற்றும் துணிநூல் தொழில் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வு கூட்டம் **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தலைமையில்** நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன் கைவினை துணிநூல் மற்றும் காதி அரசு முதன்மை செயலர் செல்வி.அபூர்வா இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன் கைவினை துணி நூல் துறை முதன்மை செயலர் / ஆணையர் திருமதி.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., கோ-ஆப்டெக்ஸ் மேலாண் இயக்குநர் திரு.டி.பி.ராஜேஷ் இ.ஆ.ப., தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்(சைமா) தலைவர் திரு.அஸ்வின் சந்திரன், சைமா பருத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு.எம்.ஜெயபால், இந்திய ஜவுளி உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு.செந்தில் குமார், தென்னிந்திய நூற்பாலைகள் சங்கத் துணை தலைவர் திரு.ஜெகதீஸ்சந்திரன் மற்றும் ஜவுளித் தொழில் அமைப்பின் நிறுவனர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி அவர்கள் தெரிவித்தாவது,**

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை உச்சத்தில் இருந்த சூழலில் அதிகப் பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பேற்று தமிழகத்தை

காத்திட அல்லும் பகலும் அயராது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவுத் தொழிலானது பல இலட்சம் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உள்ளடக்கிய, இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய தொழிலாகும்.

ஜவுளித்துறையினை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்லும் முனைப்புடன் அனைத்து ஜவுளிப்பிரிவினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு, அதனடிப்படையில் நெசவாளர்களின் வாழ்வாதரத்தை உயர்த்து வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கோயம்புத்தூர் பஞ்சாலை, நூற்பாலைகளுக்கு தேவையான உதிரிபாகங்கள், மோட்டார்கள், ஸ்டாட்டார்கள், டெக்ஸ்டைல் மிஷினரிகள் மற்றும் சிறு, குறு, பெரும் தொழிற்சாலைகள் என பன்முக வளர்ச்சியினை கொண்டதொரு மாவட்டம். எனவே, இம்மாவட்டத்தில் ஜவுளித் தொழிலில் ஈடுபடுவோரின் கருத்துக்கள் பரவலாக அனைத்து தரப்பினரின் தேவைகளை பிரதிபலிப்பதாக இருக்கும் என்பதால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இந்த ஆய்வுக்கூட்டம் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கும்

கோயம்புத்தூர் மாவட்டம் சென்னைக்கு அடுப்படியான முக்கியமானதொரு மாவட்டம், பொருளாதாரத்திலும், தொழில் துறையிலும் முன்னேற்றமடைந்த மாவட்டமாக திகழ்கிறது. ஜவுளித் தொழில் வளர்ச்சியின் காரணமாகவே கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் நெசவுத் தொழிலின் தலைநகரம் என்றும், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றும் அழைக்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 54 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 15 விசைத்தறி கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் கீழ் 11,361 கைத்தறி நெசவாளர்களும், 3071 விசைத்தறி நெசவாளர்களும் நெசவுத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதி நெசவாளர்கள் மூலம் பருத்தி பட்டு, கோரா காட்டன் சேலைகள், மற்றும் ஆர்கானிக் ரகங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், விசைத்தறிகள் மூலம் தமிழக அரசின் வேட்டி, சேலைகள், துணி ரகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறியாளர்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் வழிமுறைகள் உருவாக்கி வருகின்றது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம்(Co-Optex) சார்பில் தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் செயல்பட்டு வரும் 152 கிளை விற்பனை நிலையத்தின் மூலம் கைத்தறி நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களை நேரடியாக கொள்முதல் செய்வதுடன், சுமார் 600 விற்பனை பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனமாகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களிடம் உற்பத்தி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், நெசவாளர்களின் வாழ்வாதரத்தை உயர்த்து வகையில், நெசவாளர்களின் முத்ரா கடன் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம், முதியோர் ஓய்வூதிய திட்டம், குடும்ப ஓய்வூதிய திட்டம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கைத்தறி துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி மானியம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோல் இன்னும் ஜவுளித் தொழில் செழிக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தமிழகத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்தார்.**

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**